DEPOSITION OF WITNESS
(ORDER XVIII RULE 4 OF C.P.C)

IN THE COURT OF DICTRICT MUNSIF, THIRUVAIYARU

| | | |
|---|---|---|
| Case No. | : | O.S. No.91/2025 |
| Deposition of | : | PW1 |

| | | |
|---|---|---|
| Name | : | கஜேந்திரன் |
| Father's Name | : | சின்னையன் |
| Village | : | மேலத்திருப்பூந்துருத்தி |
| Tahsil | : | திருவையாறு |
| Calling | : | விவசாயம் |
| Age | : | 44 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of February 2026.

முதல் விசாரணை:

நான் இந்த வழக்கில் வாதியாவேன். வாதிகள் தரப்பு 1வது சாட்சியாவேன். எனது முதல்விசாரணை சாட்சி வாக்குமூலத்தை சத்தியப்பிரமாண நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள பொருண்மைகள் எனக்கு நன்கு தெரியும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

கீழ்கண்ட ஆவணங்கள் வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | வா.சா.ஆ.1 | ராமையன் இறப்பு சான்றிதழ் உண்மை நகல். |
| 2 | வா.சா.ஆ.2 | மங்களம் இறப்பு சான்றிதழ் உண்மை நகல். |
| 3 | வா.சா.ஆ.3 | வாரிசு சான்றிதழ் கோரிய விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதற்கான குறிப்புரை இணையதள பதிவிறக்க நகல். |
| 4 | வா.சா.ஆ.4 | வாதியின் ஆதார் அடையாள அட்டை நகல். (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1) எனது பெரியப்பா ராமையன் மற்றும் பெரியம்மா மங்களம் ஆகியோருக்கு குழந்தைகள் உள்ளதா என்றால் இல்லை. எனது பெரியப்பா ராமையன் மற்றும்

பெரியம்மா மங்களம் ஆகியோர் உயிருடன் இருக்கிறார்களா என்றால் இல்லை. எனது பெரியப்பா ராமையனின் உடன்பிறந்த சகோதரர் பெயர் என்ன என்றால் சின்னையன் ஆகும். மேற்படி சின்னையன் எனக்கு என்ன உறவு என்றால் தகப்பனார் ஆவார். என அம்மா பெயர் என்ன என்றால் பூங்கோதை ஆகும். எனது பெற்றோருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் நான் மட்டுமே, வேறு ஆண், பெண் வாரிசுகள் இல்லை. தற்சமயம் எனது அப்பா, அம்மா உயிருடன் இருக்கிறார்களா என்றால் இல்லை. நான் இறந்துபோன எனது பெரியம்மா மங்களம் என்பவருக்கு நேரடி வாரிசு இல்லை என்பதால் நான் கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

S.d/ Gajendran

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.02.18 19:18:59 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU